# கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்ட (திருத்த) மசோதா, 2022

**முன்னுரை:**

நாட்டின் நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளின் மேம்பாடு மற்றும் செயற்பாடுகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த, நிலைத்த வளர்ச்சியை அடையும் வகையில், அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் முறைப்படுத்தப்படவும், நிருவாகிக்கப்படவும் வேண்டிய அவசியம் உள்ளது. நாட்டின் கடற்கரையோரங்களில், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை முறைப்படுத்துவதற்கு, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தை ஏற்படுத்தும், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம், 2005 இந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றப்பட்டு 17 ஆண்டுகளில், கடலோர சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதற்கான உரிய கவனம் செலுத்தப்பட்டதோடு, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு, முறைப்படுத்தப்பட்ட வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி அடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகளின் பயனாக பல லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகள், சுய வேலைவாய்ப்புகள் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு விவசாயிகளின் வருவாயில் முன்னேற்றம் போன்றவை நீர்வாழ் உயிரின வளர்ப்பு வணிகம் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் கிரியா ஊக்கியாக செயற்பட்டதோடு, நீர்வாழ் உயிரின வளர்ப்பு சார்ந்த உபதொழில்களின் அபிவிருத்திக்கும் வழிவகுத்துள்ளது. தற்சமயம் இந்தியா உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் பல்லாயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டுவதன் மூலம் உலகளவில் முன்னணி நாடுகளில் ஒன்றாக திகழ்கிறது.

ஒரு சிறந்த சட்டம் என்பது, முற்போக்கானதாகவும், காலங்களை கடந்து பங்குதாரர்களின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஈடுகொடுப்பதாகவும், அமைய வேண்டும். கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 – னை செயற்படுத்தியதால் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் பலதரப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து இச்சட்டத்தின் கீழான நடைமுறைகளை எளிதாக்கி, உரிய பதிவுகளை விரைவாக வழங்கிடவும், முறைப்படுத்துதல் மற்றும் இணக்கச் சுமையினைக் குறைப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை களைவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டிய கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, பொதுநலன் கருதி கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005–ன் சரத்துகளை மறு பரிசீலனை செய்து, முறைப்படுத்துதல் மற்றும் இணக்கச் சுமைகளை போக்கிட வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில் இச்சட்டத்தின் முறைப்படுத்தும் கோட்பாடுகள், குற்றம் மற்றும் தண்டனைகள், குற்றவியல் நிலை நீக்கம், நீர்வாழ்

உயிரின வளர்ப்பு வரையறைகளில் உள்ள இடைவெளி நீக்கம் மற்றும் சட்டத்தை சீரிய முறையில் செயற்படுத்துவதற்கான நடைமுறைகளை எளிதாக்குதல் மூலம் சிரமங்களை களைந்து வணிகமுறையினை எளிதாக்குதல் அவசியமாகிறது. இத்தேவையின் அடிப்படையில், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 –ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்புச் சட்ட (திருத்த) மசோதா 2022 ஆனது, இந்திய அரசின் மீன்வளத்துறை மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் ஆகியவற்றின் இணைய தளங்களில், பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களின் கருத்துகளை பெறுவதற்காக ஏற்றம் செய்யப்பட்டுள்ளது.

## முன்மொழியப்பட்டுள்ள சட்டத்திருத்தங்களின் முக்கிய சாராம்சம்கள்

**விரிவான வரையறைகள் மற்றும் பண்ணை அல்லது பண்ணைகள் என்ற சொற்களுக்கு பதிலாக செயல்பாடு அல்லது செயல்பாடுகள் என்ற சொற்களை சேர்த்தல்:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம், 2005 அதன் தற்போதைய வடிவத்தில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு பண்ணைகளை மட்டும் முறைப்படுத்துவதாய் அமைந்துள்ளதை மாற்றி, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பின் அனைத்து அங்கங்களையும், அதன் நிலையான வளர்ச்சிக்கான அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்குமாறு விரிவுபடுத்தும் நோக்கத்துடன், பண்ணை அல்லது பண்ணைகள் என்ற சொற்களுக்கு பதிலாக செயல்பாடு அல்லது செயல்பாடுகள் என்ற சொற்கள் முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், தற்காலத் தேவைகளுக்கு ஏற்றவாறான சில வரையறைகளும் இந்த திருத்த மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளன.

**கீழமை அலுவலகங்களை ஏற்படுத்துவதற்கான திருத்தம்:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு, விஞ்ஞான பூர்வமாக கண்காணிக்கப்பட்டு சிறந்த முறையில் நிர்வகிக்கப்படாவிட்டால், அது ஒரு நிலைத்த நடவடிக்கையாக இருக்க இயலாததோடு, கடலோரப்பகுதிகளில் சுற்றுச்சூழல் குறித்த சமூக தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இந்தியாவில் உள்ள கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் அதை சார்ந்த நடவடிக்கைகளை முறைப்படுத்தும் பெரும் பொறுப்பினை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் தனது தோள் மேல் சுமக்கிறது. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பின் வளர்ச்சி வேகம் மற்றும் அதன் அளவினைப் பொறுத்து வலுவான நிறுவனத்தின் தேவை, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தினை அமைக்கும் போது முழுமையாக கணிக்கப்படவில்லை. மேலும், கடலோர மீன்

மற்றும் இறால் வளர்ப்பு நடவடிக்கைகளின் தற்போதைய மாற்றங்களுக்கேற்றவாறான முறைப்படுத்துதல் மற்றும் கண்காணிப்பும் இன்றியமையாததாகிறது. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தி நிலைத்தன்மையினை உறுதி செய்வதில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் பொறுப்பும் இன்றியமையாததாக உள்ள சூழல், இந்தியாவில் உள்ள கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தேவையின் அடிப்படையில் கீழமை அலுவலங்களை நிறுவுவதன் வாயிலாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தை மேலும் வலுப்பெறச் செய்வதன் அவசியத்தை உறுதி செய்கிறது. எனவே, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டப்பிரிவு 4(2) –ல் ‘‘கீழமை அலுவலகங்களை’’ நிறுவுவதற்கான சட்டத் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளது.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் தலைவர் இல்லாத போது அதற்கான கூட்டங்களை வழிநடத்துவது மற்றும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதி செய்தல்:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் தலைவர் இல்லாத நிலையில் அல்லது தலைவர் பதவி காலியாக உள்ள போது, நீர்வாழ் உயிரின வளர்ப்பு செயற்பாடுகளை பதிவு செய்வதில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது. இது தொடர்பான சட்ட தெளிவின்மையைப் போக்கிட ஆணையத்தின், தலைவர் பணியிடம் காலியாக உள்ள நிலையில் அல்லது அவர் இல்லாத நிலையில், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் ஏதேனும் ஒரு உறுப்பினரை அக்கூட்டத்தில் பங்கெடுக்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கவோ அல்லது ஆணைய தலைவரால் பரிந்துரைக்கப்பட்டவர் தலைமையேற்று நடத்திடவோ இத்திருத்தச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆணையம் தன் பணிகளை செவ்வனே செய்ய குழுக்களை நியமனம் செய்யும் அதிகாரம்:**

ஆணையம் தனது கடமை மற்றும் அதன் செயல்பாடுகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு தேவையான குழுக்களை நியமிக்க ஆணையத்திற்கு தெளிவான அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், ஆணையம் இக்குழுக்களை அமைப்பதன் மூலம், நிபுணத்துவ ஆலோசனைகளை பெறலாம். இதன் வாயிலாக கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளின் பதிவுகள், புதுப்பித்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் குறித்த கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள இயலும்.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய உறுப்பினர் செயலர், தலைமை நிர்வாக அதிகாரியாக செயல்படுவது:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டத்தில் தற்பொழுது உறுப்பினர் செயலருக்கான அதிகாரம் மற்றும் பொறுப்புகள் விவரிக்கப்படவில்லை. எனவே, உரிய

சட்டத்திருத்தம் மூலம் உறுப்பினர் செயலரின் கடமை மற்றும் பொறுப்புகளை விவரிக்க வேண்டியதின் அவசியத்தின் அடிப்படையில், உறுப்பினர் செயலரை சட்டத்தின் கீழ் அதிகாரப்படுத்த திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது. உறுப்பினர் செயலர் தலைமை நிர்வாக அதிகாரியாக செயல்படுவதுடன், குறைந்தபட்சம் இந்திய அரசின் இணைச் செயலர் பதவிக்கு குறையாத நிலையில் ஒருவர் அப்பொறுப்பு வகிப்பதும் இத்திருத்திய சட்டத்தின் கீழான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது, கட்டுப்படுத்துவது ஆகியவற்றை திறம்பட செயல்படுத்த அவசியம் எனக் கருதப்படுகிறது.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்தல்:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் அத்தியாயம் IV–ல் குறிக்கப்பட்டுள்ளவாறான அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் வாயிலாக கடலோரங்களில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கான விதிமுறைகளை உருவாக்கிடவும், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு பண்ணைகள், குஞ்சு பொரிப்பகங்கள் ஆகிய நிறுவனங்களை ஆய்வு செய்யவும் அவற்றின் பதிவு மற்றும் புதுப்பித்தல், மாசுபடுத்தும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிறுவனங்களை இடித்தல் மற்றும் அகற்றுதலுக்கானஅதிகாரம் வழங்கப்படுள்ளது, இச்சட்டத்திருத்தம் மூலம் விரிவடைந்த நோக்கம் மற்றும் பயன்பாட்டின் தேவைக்கேற்றவாறு குஞ்சு பொரிப்பகங்கள், சினை உற்பத்தி மையங்கள் (BMC) , அதிபாதுகாப்பான இனப்பெருக்க மையங்கள் (NBC) மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக்கு தேவையான இடுபொருட்கள் ஆகியவற்றினை இச்சட்டதின் கீழ் கொண்டு வருவதற்கான சட்டத் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய பதிவு மற்றும் பதிவுச் சான்றின் செல்லத்தக்க காலத்தில் போதிய திருத்தங்கள் மேற்கொள்வது:**

தற்பொழுது 5 ஆண்டுகள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பதிவுச் சான்றின் செல்லத்தக்க கால அளவினை அதிக கால அளவுடன் மாற்றம் செய்யவும், அரசு வழங்கும் நிலங்களின் ஒதுக்கீடு கால அளவிற்கு ஏற்றவாறு மாற்றம் செய்யவும், மீன் வளர்ப்பு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். ஒரு சில இறால் மற்றும் மீன்வளர்ப்பு விவசாயிகள் பதிவுச் சான்றின் செல்லத்தக்க காலத்தினை நீட்டிக்கவும் மற்றும் ஒரு சிலர் குறைக்கவும் கோரிக்கைகள் வைத்துள்ளனர். அதன்படி பதிவு மற்றும் புதுப்பித்தலுக்கான செல்லத்தக்க காலத்தை விதிகள் மூலம் தேவைக்கேற்ப வரையறுக்கும் அதிகாரத்தினை ஆணையத்திற்கு வழங்கி சட்டத் திருத்தம் மூலம் முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம், பதிவு மற்றும் புதுப்பித்தலில் ஏற்படும் சிரமங்களை நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**குஞ்சு பொரிப்பகம், சினை உற்பத்தி மையங்கள், அதிபாதுகாப்பான இனப்பெருக்க மையங்கள், கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்ப்பு ஆகியன "அபிவிருத்தி தடை மண்டலங்களில்" அமைவதிலிருந்து விலக்களித்தல்:**

தற்போதைய கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005, பிரிவு 13(8) –ன் படி, "அபிவிருத்தி தடை மண்டலங்களில் (NDZ)," அதாவது, கடலோர ஒழுங்குமுறை மண்டலத்திற்குள் வரும் கடலோர உயர் அலைக்கோட்டிலிருந்து நிலப்பரப்பு நோக்கி 200 மீட்டர் மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டல எல்லைக்குட்பட்டு அமைந்துள்ள சிற்றோடைகள், ஆறுகள் மற்றும் உப்பங்கழிகள் ஆகிய பகுதிகளில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இறால்/ மீன் குஞ்சு பொரிப்பக நடவடிக்கைகள் கடலோர ஒழுங்காற்று மண்டல அறிவிக்கைகளில், அறிவிப்பு செய்யப்பட்ட 1991 ஆம் ஆண்டு முதல் விலக்களிக்கப்பட்ட செயற்பாடுகள் ஆகும். கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு பண்ணைகளை இம்மண்டலத்தில் அமைப்பதை தடைசெய்வதற்காக உருவாக்கப்பட்ட இப்பிரிவானது, குஞ்சு பொரிப்பகங்களுக்கும் பொருந்துவதாக தவறாக புரிந்துகொள்ளப்படுகிறது. கடலோர பகுதிகளின் கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்ப்பு ஒரு முக்கிய ஊரக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கையாக அரசால் ஊக்குவிக்கப்படுகிறது. எனவே, அவற்றை ஊக்குவிக்கவும், கடலோர ஊரக மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 பிரிவு 13(8) லிருந்து இதுபோன்ற செயற்பாடுகளுக்கு அரசு அறிவிக்கை மூலம் விலக்களிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு செயற்பாடுகளின் மீது கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகளின் பொருந்தா நிலையினை தெளிவுபடுத்துவதற்குரிய சட்டத் திருத்தம்:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம், 2005, பிரிவு 27ல் குறிப்பிட்டுள்ளவாறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டப்பிரிவு 3(1) மற்றும் பிரிவு 3 (2) (V) மற்றும் அதன் விதிகளின் கீழ் கடலோர பகுதிகளை, கடலோர ஒழுங்குமுறை மண்டலங்களாக பிரித்து, அதில் வரும் செயற்பாடுகளை முறைப்படுத்தும், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகளின் அதிகார வரம்புகளின் கீழ் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு வரவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 –ன் "நோக்க–காரண அறிக்கையில்" குறிப்பிட்டுள்ளவாறு அரசின் நோக்கமானது கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் கீழ், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை தடை செய்யப்பட்ட செயற்பாடாக கருதக்கூடாதென்பதாகும். மேலும், இந்த பொருளாதார செயற்பாட்டால் ஏற்கனவே

ஏற்படுத்தப்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள், தொழிலாளர்கள் மற்றும் முதலீடுகளுக்கான உத்திரவாதம் வழங்கி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்குட்பட்டு நீர்வாழ் உயிரின வளர்ப்பினை வளர்ச்சியடைய செய்வது அவசியம் என அரசு கருதியது. எனவே, மேற்கண்ட அரசின் நோக்கங்களை முழுமையாக அடைவதற்கும் அவற்றில் தற்போதுள்ள ஒருசில குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் சரத்துகளை திருத்தியமைத்து, நீர்வாழ் உயிரின வளர்ப்பானது தடைசெய்யப்பட்ட செயல் அல்ல என்பதை தெளிவுபடுத்தும் உரிய சட்ட திருத்தம் செய்ய முடிவு செய்தது. இருப்பினும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 பிரிவு 27–ல் நிலவும் தெளிவின்மை காரணமாக அரசின் நோக்கம் தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பில் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கைகளின் ஒழுங்குமுறையை செயல்படுத்துவது, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் மீது இரட்டை ஒழுங்குபடுத்துதலையும், சிரமத்தையும் கொண்டு வருமாகையால், அதற்குரிய தெளிவினை கொண்டுவரும் வகையில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம், 2005 பிரிவு 27 –ல் உரிய சட்டத் திருத்தம் மேற்கொண்டு சுற்றுச்சூழல் பிரிவு 3(1) மற்றும் பிரிவு 3 (2) (V) கீழ் வெளியிடப்பட்டுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையின் அதிகார வரம்பிலிருந்து கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கு விலக்களிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

**கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு புதுப்பித்தல் குறித்த விண்ணப்பங்கள் காலதாமதமாக பெறுவதை முறைப்படுத்துவதற்கான திருத்தம்:**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவு புதுப்பித்தலை காலதாமதமாக விண்ணப்பிக்கும் பட்சத்தில், அவற்றை நிராகரிக்காமல், அக்காலதாமதத்திற்குரிய அபராதத்தொகையுடன் புதுப்பித்தல் மேற்கொள்ளப்படுவதற்கு ஏதுவான சட்டத்திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது. இதன் வாயிலாக தொடர்ந்து முறைப்படுத்தப்பட்ட, சட்ட இணக்கத்துடனான கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு செயற்பாடுகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**பதிவுச் சான்று சிதைவு/சேதம்/இழப்பு ஏற்பட்டால் புதிய சான்று வழங்குவது, உரிய பெயர் மாற்றங்கள் மேற்கொள்வது தொடர்பான நடவடிக்கைகள்**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவுச்சான்றின் உரிமையாளர் பெயர் மற்றும் செயற்பாட்டின் அளவு மாற்றங்கள் செய்வதற்கான வழிவகை ஏதுமின்றி, புது பதிவு மேற்கொள்ளும் நடைமுறை நிலுவையிலுள்ளது. அவற்றை தவிர்க்கும் பொருட்டு குறித்த

செல்லத்தக்க காலத்தில் பெயர் மற்றும் செயற்பாட்டின் அளவு மாற்றங்கள் மேற்கொள்ள வழிவகை செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், பதிவுச்சான்று சிதைவு/சேதம்/இழப்பு ஏதேனும் ஏற்பட்டால் புதிய பதிவு சான்றுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அலுவலர்களுக்கு அங்கீகாரம் வழங்கச் செய்தல்.**

தண்டனைகள் குறித்த திருத்தங்களுடன் இணைந்து அலுவலர்களுக்குரிய, அங்கீகாரம் மற்றும் மேல்முறையீடுகள் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிய திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளது.

**குற்றமற்ற தன்மைக்கான சட்ட வரைவு**

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம் 2005 பிரிவு 14–ன் கீழ் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் உரிய பதிவுகள் மேற்கொள்ளாமல் செயல்படும் பட்சத்தில் அதற்கான தண்டனையாக ரூபாய் ஒரு லட்சம் அபராதம் அல்லது மூன்றாண்டுகள் சிறை தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தண்டனைகள் விவசாயிகளுக்கு விதிக்கப்படும் அதீத தண்டனைகள் என்பதால், இவற்றை மறுபரிசீலனை செய்ய நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் இதர பங்குதாரர்கள் கோருவதோடு, சிறைதண்டனையினை நீக்கவும் கோரிவருகின்றனர்.

இறால் மற்றும் மீன் வளர்ப்பு என்பது விவசாயம் மற்றும் அதை சார்ந்த தொழிலாகும். இந்நிலையில் பதிவு செய்யாமல் கடலோர பகுதிகளில் இயங்கும் இறால் மற்றும் மீன் வளர்ப்பு பண்ணைகள் இச்சட்டத்தின் படி குற்றமான செயலாக கருதப்படுவது நியாயமற்றதாகும். கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்டம், 2005 ஏற்படுத்தப்பட்டு 17 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில், தண்டனைக்குரிய சட்டப்பிரிவு 14–ஐ இதுவரை நடைமுறைப்படுத்தியதில்லை. ஆதலால் இந்த பிரிவு பரிசீலனைக்கு உகந்தது என கருதப்படுகிறது. எனவே இச்சட்டப்பிரிவு 14–ஐ திருத்தி, சிறை தண்டனைக்கு மாற்றாக அபராதம் மட்டுமே விதிக்க முன்மொழியப்பட்டுள்ளது. பதிவு செய்யாமல் இயங்கும் உவர் நீர் வாழ் உயிரின வளர்ப்பு பண்ணையாளர்கள் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்ட விதிகளுக்கு புறம்பாக செயல்படும் பண்ணை உரிமையாளர்களுக்கு விதிமீறலுக்கேற்ப, ''மாசுபடுத்துவோர் அதற்கான பரிகார தொகை செலுத்தும்'' கோட்பாட்டின் அடிப்படையில் அபராதம் விதிக்க அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. மேலும் இந்நிகழ்வில் போதிய வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பார்ந்த தன்மையினை கடைபிடிக்கும் வகையில் ஒழுங்குமுறை கட்டமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் வாயிலாக அலுவலர்களின் விருப்புரிமையினை

தவிர்க்கவும், விவசாயிகள் தேவையின்றி தண்டிக்கப்படுவதை தவிர்க்கவும், தேவையான முன்னெச்சரிக்கை விவரங்கள், சேர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள கடலோர மாவட்டங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் கடலோர பகுதிகளில் அமைந்துள்ள உவர் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை முன்னெச்சரிக்கை கோட்பாடுகள் இழைந்தோடும் வழிகாட்டு நெறிமுறைகள் மூலமும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையச் சட்ட விதிகளுக்குட்பட்டும் அதிகரிப்பதன் வாயிலாக குறைந்த விலையிலான மற்றும் பாதுகாப்பான புரதச்சத்து அனைத்து மக்களுக்கும் சென்றடையும் என்பதில் எவ்வித ஐய்யமும் இல்லை.

**ஒம்/–**
**முனைவர். ஜெ. பாலாஜி, இ.ஆ.ப.,**
**இணைச் செயலர்,**
**மீன்வளத்துறை,**
**இந்திய அரசு,**
**மின்னஞ்சல்: jsfy@nic.in**